# அண்ணா வழி திராவிடம்

## வாழ்வியலுக்கான அரசியல்

வெளியீடு: அஇஅதிமுக தலைமை கழகம்

17.09.2025 | பாதை: 1 பயணம்: 1 | மாதம் இருமுறை



# நாடும் நடப்பும்

-அனு பாரதி

## 150 தொகுதியிலும் நூற்றுக்கு நூறு! எடப்பாடியாரும், எழுச்சி பயணமும்...!

தமிழ்நாடு அரசியல் வரலாற்றில், அரசியல் களங்கள் இதுவரை கண்டிடாத, எழுச்சி பயணம். அதிமுக பொதுச்செயலாளர் புரட்சித்தமிழர் எடப்பாடி கே பழனிசாமி அவர்களின் “மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம்” என்ற சுற்றுப்பயணத்தின் மூலம் தமிழக மக்களின் அமோக வரவேற்பை பெற்று வருகிறார். 50 நாட்கள் கடந்து, 25 மாவட்டங்களில், 153 சட்டமன்ற தொகுதிகளை நிறைவு செய்திருக்கிறார்.

ஒரு மரம், தன்னுடைய ஆழமான வேர்களை பரப்பி, வலுசேர்ப்பது போல எல்லா சவால்களையும் உடைத்து, கழகத்தை சரியான பாதையில் வழிநடத்தி வருகிறார் எடப்பாடியார். கழக நிர்வாகிகளுக்கு நம்பிக்கையையும், இரண்டு கோடி தொண்டர்களின் பலத்தையும் மக்களின் பேரன்பையும் இந்த எழுச்சி பயணம் மூலம் பெற்று இருக்கிறார்.

செல்லும் வழியெல்லாம், தமிழ்நாட்டு மக்களை ஸ்டாலின் மாடல் என்ற விடியா மக்கள் விரோத அரசின் பிடியில் இருந்து மீட்டு, நல்லாட்சி வழங்குவதுதான் அஇஅதிமுகவின் நோக்கம் என்பதை தெளிவாகவும், உறுதியாகவும் சொல்லி வருகிறார்.

புரட்சித்தமிழரின் அரசியல் நகர்வும், ஆளும் அரசை நோக்கி அவர் எழுப்பும் ஒவ்வொரு கேள்வியும், அவரின் மிக சரியான அரசியல் பார்வையை பிரதிபலிக்கிறது. அவர் சுற்றுப்பயணம் தொடங்கும் போது, பெரிதாக அலட்டி கொள்ளாத ஆளும் கட்சிகள், புரட்சித்தமிழரின் எழுச்சி உரையை கண்டு பயத்தில், அடுத்துதடுத்து பல மக்கள் நலத்திட்டங்களை பதற்றத்துடன் செயல்படுத்தியதை பார்த்தால், எங்கே மீண்டும் அதிமுக ஆட்சியை பிடித்து விடுமோ என்ற அச்சம் விடியா ஸ்டாலின் மாடல் அரசிடம் எழும்பி இருப்பதையே குறிக்கிறது.

ஒவ்வொரு தொகுதியிலும், மக்களின் குறைகளையும், அவர்கள் முன் வைக்கும் கோரிக்கைகளையும் கேட்டு, அதற்கு பதில் அளித்தும் அதிமுக ஆட்சி அமைந்ததும் கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என்றும் உறுதி அளித்துளார். இது இந்த விடியா அரசின் பிடியில் சிக்கியிருக்கும், மக்களுக்கு மிக பெரிய ஆறுதலாக உள்ளது.

“கெடு வைத்தாலும், கேடு விளைவித்தாலும்”, கழகம்தான் என்னுடைய உயிர்மூச்சு, மக்கள் பணியே என்னுடைய முதல் கடமை என்பதில் முழு வீச்சுடன் செயலாற்றி வரும் எடப்பாடியாரின் வியூகங்கள், எடுக்கும் அதிரடி முடிவுகள், எதிரிப்படைகளை திக்குமுக்காட வைக்கிறது.

எத்தனை நூற்றாண்டுகள் வந்தாலும், அண்ணா திராவிட முன்னேற்ற கழகம், மக்களுக்காக இயங்கும் என்ற புரட்சித்தலைவியின் சூளுரையும், ரத்தத்தின் ரத்தமான தொண்டர்களின் ஏகோபித்த பலமும், எல்லாரும் விரும்பும் ஓர் எளிய தலைவராக எடப்பாடியார் மக்கள் மனதில் இடம் பிடித்து விட்டார்என்பதையே காட்டுகிறது.

தமிழகத்திற்கு நல்லாட்சியை அதிமுகவை தவிர யாரும் தர முடியாது என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்தி, அதிமுகன்னா All Pass தான் என்பதை ஆணித்தரமாக பதிவு செய்துள்ளார் எடப்பாடியார்.

மொத்தத்தில் “மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம்” என்ற எழுச்சிப்பயணம் 2026ல் அஇஅதிமுகதான் நிச்சயம் ஆட்சி அமைக்கும் என்பதை உரக்கச் சொல்கிறது.

**வெல்லட்டும் எடப்பாடியார்**
**துளிர்க்கட்டும் இரட்டை இலை**

# வெளிநாட்டு பயணத்தின் வெள்ளை அறிக்கை எப்போ வரும்?

வெளிநாட்டு சுற்றுப்பயணம் செய்து 32 லட்சத்து 81 ஆயிரம் வேலை வாய்ப்புகளை உருவாக்கிவிட்டதாக மார் தட்டிக்கொள்ளும் ஸ்டாலின், அது குறித்து வெள்ளை அறிக்கையை தைரியமாக வெளியிடத் தயாரா? என முதல்வர் ஸ்டாலினுக்கு, அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி கே பழனிசாமி கேள்வி எழுப்பி இருந்தார்.

2021 சட்டமன்ற தேர்தலின் போது சுமார் 525க்கும் மேற்பட்ட வாக்குறுதிகளை திமுக அளித்தது. இப்போது 90 சதவிகிதம் நிறைவேற்றிவிட்டோம். 95 சதவிகிதம் நிறைவேற்றிவிட்டோம் என்று மேடைதோறும் பச்சைப்பொய் பேசி, மக்களின் காதுகளில் பூ சுற்றி வருகிறது ஸ்டாலின் மாடல் அரசு.

முதல்வரும் தொழில் துறை அமைச்சரும், வெளிநாட்டில் இருந்து முதலீடுகள் வந்துவிட்டதைப் போலவும், வேலைவாய்ப்புகள் லட்சக்கணக்கில் உருவாகிவிட்டதைப் போலவும் சமூக வலைத்தளங்களில், பதிவிட்டு வருகிறார்கள்.

திமுக ஆட்சிக்கு வந்த பிறகு, முதல்வர் ஸ்டாலின் 2022ஆம் ஆண்டு மார்ச் 24 முதல் 29 வரை துபாய்க்கு சுற்றுப்பயணம் சென்றார். அப்பொழுது நோபல் ஸ்டீல் 1000 கோடி, லுலு மால் 3,500 கோடி, ட்ரான்ஸ்வோல்ட், வைட் ஹவுஸ் மற்றும் ஆஸ்டர்டாம் ஹெல்த் கேர் என ஆறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் 6,100 கோடி ரூபாய்க்கு முதலீடு ஈர்த்துவிட்டதாக அறிக்கை விட்டார்கள். அதன்பேரில் ஆறு நிறுவனங்களும் தொழிலை ஆரம்பித்து விட்டனவா? எத்தனை பேருக்கு வேலை கிடைத்துள்ளது?என்ற விவரம் யாருக்குமே தெரியலை.

இரண்டாவதாக ஜப்பான் சிங்கப்பூர் நாடுகளுக்கு ஒன்பது நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3,233 கோடி ரூபாய் முதலீடு பெற்று 5000 பேருக்கு வேலைவாய்ப்பு உருவாக்க போட்ட ஒப்பந்தங்களில் எவ்வளவு முதலீடு வந்தது. அந்த விவரமும் யாருக்கும் தெரியாது.

மூன்றாவதாக ஸ்பெயினுக்கு 2024ஆம் ஆண்டு ஜனவரியில் 11 நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டு



3,440 கோடி ரூபாய் முதலீட்டை ஈர்த்தோம் என்று மார்தட்டி கொள்கிறார்கள். அந்த முதலீட்டில் எத்தனை பேருக்கு வேலை கிடைத்துள்ளது என்ற விவரமும் யாருக்கும் தெரியாது.

நான்காவதாக, 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாத்தில் 17 நாட்கள் அமெரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அதன்மூலம் 11,516 பேருக்கு வேலை வாய்ப்பை உருவாக்கும் வகையில் 19 ஒப்பந்தங்கள் போடப்பட்டது. அதன்மூலம் 7,618 கோடி ரூபாய் முதலீடு ஈர்த்ததாக தெரிவித்தனர். இதன்மூலம் எத்தனை பேருக்கு வேலை கிடைத்தது என்ற விவரமும் யாருக்கும் தெரியாது.

இந்நிலையில தற்போது 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 30 முதல் செப்டம்பர் 8 வரை 10 நாட்கள் ஜெர்மனி, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டார். இந்த பயணத்தில் 15, 516 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 17,613 வேலைவாய்ப்பை உருவாக்க ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டது.

இவைத்தவிர 2024ல் நடைபெற்ற உலக முதலீட்டாளர் மாநாடு மூலம் 6 லட்சத்து 64 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் ஒப்பந்தங்கள் மேற்கொண்டதாகவும் அதன்மூலம் 14 லட்சத்து 50 ஆயிரம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று சொல்லப்பட்டது.

இதில் 2021க்கு முன்பு அதிமுக ஆட்சியில் போடப்பட்ட ஒப்பந்தங்கள் மூலம் பெறப்பட்ட முதலீடுகளையும், திமுக தனது சாதனையாக கூறிக்கொள்கிறது. எனவே தான் வெளிநாட்டு முதலீடுகள் குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என கேட்கிறோம் என கழக பொதுச்செயலாளர் தெரிவித்துள்ளார். மத்திய அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் கடந்த மூன்றாண்டுகளில், 2025ஆம் ஆண்டு மார்ச் வரை 68,507 கோடி ரூபாய் மட்டுமே மூலதனமாகப் பெற்று ஐந்தாவது இடத்தில் தான் தமிழ்நாடு உள்ளது. மஹாராஷ்டிரா, கர்நாடகா, குஜராத் போன்ற மாநிலங்கள் தமிழ்நாட்டை விட பல மடங்கு முதலீடுகளை ஈர்த்துள்ளது. அப்படி இருக்க தமிழ்நாடு முதலிடம் என ஏன் பொய் பிரச்சாரம் செய்ய வேண்டும் என கழக பொதுச்செயலாளர் கேள்வி எழுப்பியுள்ளார். அப்படி என்றால் திமுக அரசு கொடுக்கும் புள்ளிவிவரங்கள் கற்பனையான புள்ளி

**ஐந்து முறை வெளிநாட்டு சுற்றுப்பயணம், உலக முதலீட்டாளர் மாநாடு என எவ்வளவு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளது**

**எவ்வளவு முதலீடு ஈர்க்கப்பட்டுள்ளது**

**எவ்வளவு தொழில்கள் தொடங்கப்பட்டுள்ளது**

**எவ்வளவு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது**

விவரங்களா என்று பொருளாதார வல்லுநர்கள் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

ஆகிய விவரங்களை தமிழக அரசு, தொழில்துறை இணையதளத்திலோ, முதலீட்டு வழிகாட்டி நிறுவனத்தின் இணையதளத்திலோ வெளிப்படையாகவோ ஏன் வெளியிடுவதில்லை?

தொழில்துறை அமைச்சரும் முதல்வரும் தொடர்ந்து வெற்று விளம்பரம் தேடுவது, இந்த அரசு ஒரு பொய் பித்தலாட்ட அரசு என்பதையே உறுதி செய்கிறது என்று தெரிவித்துள்ளார்.

எனவே முதல்வர் ஸ்டாலினிடம், உங்கள் ஆட்சியில் தொழில் முதலீடுகள் குறித்தும் தொடங்கப்பட்ட தொழில்கள் குறித்தும், உருவாக்கப்பட்ட வேலை வாய்ப்புகள் குறித்தும் வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என அதிமுக பொதுச்செயலாளர் வலியுறுத்தியுள்ளார்.



## நமக்கான தலைவர் – புரட்சித்தமிழர்

# அம்மா கண்டெடுத்த விவசாயி

**- நளினா**

அண்ணா வழியில் உருவான மாபெரும் மக்கள் இயக்கமான அதிமுக, எப்போதும் மக்கள் நலனை மையமாகக் கொண்டே செயல்படுகிறது. சமூக நீதி, தமிழர் உரிமைகள், சமூக மேம்பாடு, ஒருங்கிணைந்த வளர்ச்சி, அமைதியான தமிழ்நாடு, வளர்ச்சியடைந்த மாநிலம் இது தான் அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் முக்கிய பணிகளாக இருந்து வருகிறது.

இந்த இயக்கத்தில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித்தலைவி ஜெயலலிதா ஆகியோரின் வழித்தோன்றலாக, தமிழகத்தில் திராவிட இயக்க அரசியலின் முக்கிய தலைவராக அதிமுக பொதுச்செயலாளர் புரட்சித்தமிழர் எடப்பாடி கே. பழனிசாமி உள்ளார்.

“மக்கள் நலனே முதன்மை” என்பதே அதிமுகவின் அடையாளம். அந்தக் கட்சியில், இன்று மக்கள் நம்பிக்கையோடு பார்க்கும் தலைவராக உருவெடுத்தவர் எடப்பாடி கே. பழனிசாமி.

புரட்சித்தமிழர் எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் ஆட்சிக்கால சாதனைகளும், மக்களோடு இயைந்த பண்பும், கட்சியை வழிநடத்தும் பாங்கும் அவரை தனித்துவமிக்க “உண்மையான திராவிடத் தலைவர்” என்ற அடையாளத்துக்கு உரியவராக ஆக்கியுள்ளது.

சேலம் மாவட்டத்தில் ஒரு விவசாய குடும்பத்தில் பிறந்த எடப்பாடி கே. பழனிசாமி, கல்லூரி படிக்கும் போதே அதிமுகவில் தன்னை அடிமட்டத் தொண்டனாக இணைத்துக் கொண்டார். படிப்பை முடித்த பிறகு வெல்ல வியாபாரத்தை கொஞ்சம் காலம் செய்தார். பிறகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரின் மக்கள் பணியின்பால் ஈர்க்கப்பட்டு முழுநேர அரசியலில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். அவரது மக்கள் பணியைக் கவனித்த அதிமுக தலைமை, அவருக்கு சிலுவம்பாளையம் கிளை கழகச் செயலாளர் பொறுப்பினை அளித்தது. பிறகு அவரது உழைப்பால் படிப்படியாக உயர்ந்து, சட்டமன்ற உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினர், அமைச்சர் என உயர்ந்து தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்றார். இதனையடுத்து அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் பொதுச்செயலாளராக தொண்டர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

புரட்சித்தலைவி ஜெயலலிதா அவர்களின் மறைவுக்கு பிறகு 2017 முதல் 2021 வரையிலான காலகட்டத்தில் முதலமைச்சராக பொறுப்பு வகித்தார். அதோடு மட்டுமல்லாமல் பல துரோக சக்திகளிடம் இருந்து கழகத்தை காப்பாற்றி ஒருங்கிணைத்து தொண்டர்களை அன்போடு அரவணைத்து செல்லும் தனிப்பெரும் தலைவராக புரட்சித்தமிழர் எடப்பாடி கே. பழனிசாமி இருந்து வருகிறார்.

இவரது ஆட்சிக்காலத்தில், விவசாயம், நீர் மேலாண்மை, சுகாதாரம், உள் கட்டமைப்பு, சாலை மேம்பாடு, தொழில் வளர்ச்சி, சமூக நலத் திட்டங்கள், கொரோனா பெருந்தொற்று கால மேலாண்மை ஆகிய துறைகளில் மிக சிறப்பாக செயல்பட்டார். மருத்துவக்கல்வியில் அரசுப்பள்ளி மாணவர்களுக்கு 7.5% உள் இடஒதுக்கீடு தந்து சமூக நீதியைக் காத்தார். 11 மருத்துவக் கல்லூரிகள், அம்மா கிளினிக் என தமிழ்நாட்டின் மருத்துவக் கட்டமைப்பை வலுப்படுத்தினார். வெளிநாடுகளில் இருந்து முதலீடுகளை ஈர்த்து தொழில் வளர்ச்சியை அதிகப்படுத்தினார். சிறப்பான நிர்வாகத்திற்காக மத்திய அரசின் பல விருதுகளைப் பெற்றார். கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் மக்களுக்கு இலவசமாக அரிசி மற்றும் நிதியுதவி வழங்கி, பேரிடர் காலத்தை சிறப்பாக கையாண்டார். நீர்நிலைகளை தூர்வாரி கடைமடை பகுதி விவசாயிகளும் பாசன வசதி பெற வழிவகை செய்தார். இவர் மேற்கொண்ட குடிமராமத்துப்பணிகளால் “குடிமராமத்து நாயகன்” என அழைக்கப்படுகிறார்.



# அம்மா கண்டெடுத்த விவசாயி

## *கடவுள் எனும் முதலாளி!*
## *கண்டெடுத்த தொழிலாளி... விவசாயி!*

என்பது புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரின் பாடல். இந்த பாடல் வரிகளுக்கு ஏற்ப புரட்சித்தலைவி அம்மா கண்டெடுத்த விவசாயிதான் புரட்சித்தமிழர் எடப்பாடி கே. பழனிசாமி.

அடிப்படையிலே விவசாயி என்பதால், விவசாயிகளுக்கு என்னென்ன தேவைகள் உள்ளன என்பதை ஒவ்வொன்றாக பார்த்து பார்த்து செய்தார்.

முதல்வராக பதவியில் இருக்கும் போதும் தன்னை ஒரு விவசாயி என்றே அடையாளப்படுத்திக்கொண்டார். இப்போதும் தான் முதலில் ஒரு விவசாயி, அடுத்து தான் அரசியல்வாதி என்கிறார். அந்த அளவுக்கு விவசாயத்தின் மீதும் விவசாயிகள் மீதும் மிகுந்த அக்கறையுள்ளவராக இருந்து வருகிறார். புரட்சித்தமிழர் எடப்பாடி கே. பழனிசாமி ஆட்சிக்காலத்தில், விவசாயிகளுக்காக பல சாதனை திட்டங்களை நிறைவேற்றினார். காவிரியில் தமிழர்களின் உரிமையை நிலை நாட்டும் விதமாக காவிரி மேலாணமை ஆணையம் அமைக்கப்பட்டது. இதனால் தமிழ்நாட்டின் பாசன உரிமை உறுதிசெய்யப்பட்டது.

தமிழகத்தில் உள்ள அனைத்து நீர் நிலைகளும் தூர்வாரப்பட்டு குடிமராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டது. நீர் நிலைகளில் இருந்து வண்டல் மண்ணை விவசாயிகள் எடுத்து செல்ல அனுமதி அளிக்கப்பட்டது. இதனால் ஒருபக்கம் ஏரிகள் ஆழமாகின. இன்னொருபக்கம் விவசாயிகளுக்கு நல்ல விளைச்சல் கிடைத்தது. பொதுப்பணித்துறையின் கீழ் உள்ள 12 ஆயிரம் ஏரிகளில், ரூ. 1,240 கோடி செலவில் 6000 கண்மாய்கள் தூர்வாரப்பட்டது. உள்ளாட்சி அமைப்பு சார்பில் 26 ஆயிரம் கண்மாய்கள் தூர் வாரப்பட்டன.

டெல்டா விவசாயிகளின் நலன்கருதி, டெல்டா மண்டலத்தை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்தார். ஹைட்ரோ கார்பன், மீத்தேன் போன்ற திட்டங்களால் விவசாய நிலங்கள் பறிபோவதை பாதுகாக்கும் வகையில் இந்த அறிவிப்பை வெளியிட்டார். கொங்கு மண்டல விவசாயிகளின் நீண்டநாள் கனவு திட்டமான, அத்திக்கடவு - அவினாசி திட்டத்தை நிறைவேற்றினார். இவரது ஆட்சிக்காலத்தில், தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியில் விவசாயிகள் பெற்ற பயிர்க்கடனை இரு முறை விவசாயக் கடனை தள்ளுபடி செய்யப்பட்டது. ரூ. 12,000 கோடி தள்ளுபடி செய்யப்பட்டது.



இவரது ஆட்சிக்காலத்தில், விவசாயத் தொழிலாளிகளுக்கு பசுமை வீடுகள், ஆடுகள், கறவை மாடுகள், கோழிகள் வழங்கப்பட்டது. உழவர் பாதுகாப்பு திட்டம் அமல்படுத்தப்பட்டது. முதியோருக்கு சட்டமன்ற விதி 110ன் கீழ் 5 லட்சம் பேருக்கு நிதி வழங்கப்படும் என்ற அறிவிப்பைக் கொடுத்து, 4 லட்சத்து 85 ஆயிரம் பேருக்கு உதவித்தொகை வழங்கினார். 85% பேருக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் உதவித்தொகையை வழங்கினார்.
பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு அதிகப்படியான வறட்சி நிவாரணத்தைவழங்கினார்.
புரட்சித்தமிழரின் முன்னெடுப்பால் காவிரி ஆற்றை தூய்மைபடுத்தும் விதமாக கொண்டுவரப்பட்ட, நடந்தாய் வாழி காவிரி திட்டத்திற்கு மத்திய அரசு நிதி ஒதுக்கியுள்ளது.



# பெரியாரின் எழுத்து சீர்திருத்தங்கள்:

## ஒரு புரட்சிகரமான முடிவு

**- ராஜேஷ் கண்ணன்**

மொழி மனிதனின் பண்பாடு மற்றும் அறிவாற்றல் திறன்களை வடிவமைப்பதில் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கிறது. மொழியானது எளிமையானதாகவும், மக்களுக்கு உகந்ததாகவும் இருக்கும்போது, அதன் பயன்பாடு பெருமளவில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது . இந்த எளிய உண்மைதான், பெரியார் மேற்கொண்ட தமிழ் எழுத்துச் சீர்திருத்தங்களுக்குப் பின்னால் இருந்த முக்கிய நோக்கம். 1930களில், அச்சிடும் மற்றும் தட்டச்சு செய்யும் பணியின் சிக்கல்களைக் குறைக்கும் வகையில், அவர் தமிழ் மொழியை எளிமையாக்க முற்பட்டார். தனது 'குடி அரசு' மற்றும் 'விடுதலை' போன்ற பத்திரிக்கைகளில் இந்த மாற்றங்களை அறிமுகப்படுத்தினார். இந்தச் சீர்திருத்தங்கள், சிக்கலான வடிவில் இருந்த சில உயிரெழுத்துக்கள் மற்றும் உயிர்-மெய் எழுத்துக்களை எளிமைப்படுத்தின. பெரியாரின் தொலைநோக்குப் பார்வை, உலகளாவிய தமிழ் மொழியின் அணுகுமுறைச் சிக்கல்களைத் தீர்க்க உதவியது . பழமைவாத மற்றும் பாரம்பரிய உணர்வுகளை உடைத்து, தமிழ் மொழியின் நிலைத்தன்மைக்கு மாற்றம் அவசியம் என்பதை அவர் வலியுறுத்தினார்.

### எம்.ஜி.ஆரின் துணிச்சலான நடவடிக்கை: தமிழுக்கு ஒரு புதிய அத்தியாயம்:

பெரியாரின் சீர்திருத்தங்களுக்கு ஒரு அதிகாரப்பூர்வ அங்கீகாரம் தேவைப்பட்ட நிலையில், முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ராமச்சந்திரன் 19.10.1978 அன்று அந்தச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த அதிகாரப்பூர்வமாக உத்தரவிட்டு சட்ட அங்கீகாரம் வழங்கினார். இது வெறும் 13 எழுத்துக்களைப் பற்றிய மாற்றம் மட்டுமல்ல; இது, மொழியை எளிமையாக்கி, அதை எண்ணற்ற மக்களிடம் எளிதில் சென்றடையச் செய்த ஒரு துணிச்சலான முடிவு. இந்தச் செயல், தமிழ் மொழியை உயிர்ப்புடன் வைத்திருக்க உதவியதோடு, தமிழக வரலாற்றில் ஒரு தனித்துவமான சாதனையாக இன்றும் திகழ்கிறது. எம்.ஜி.ஆரின் இந்தச் செயல், ஒரு புரட்சிகரமான முடிவாகப் பார்க்கப்படுகிறது.

### திமுகவின் அரசியல்: வாக்கு வங்கி, வாரிசு அரசியல், மற்றும் துரோகங்கள்:

தமிழுக்குச் செம்மொழி அந்தஸ்த்தை பெற்றுத் தந்த திமுக ஒரு பெரிய சாதனையாகப் பார்க்கிறது.ஆனால் செம்மொழி அந்தஸ்தை பத்தோடு பதினொன்றாக பெற்றுக்கொடுத்தார்களே தவிர,உலகளவில் தமிழ் மொழிக்கு பெருமை சேர்க்கவில்லை. புரட்சித் தலைவர் எம்ஜிஆர் , புரட்சித் தலைவி அம்மா ஆகியோர் தமிழின் பெருமையை உலக தமிழ் மாநாட்டின் முலம் உலகளவில் கொண்டு சென்றனர்.மேலும் தமிழை உயிர்ப்புடன் வைத்திருக்க தந்தை பெரியார் கொண்டு வந்த எழுத்துச்சீர்திருத்தத்தை செயல்படுத்திய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் போன்ற எந்த ஒரு செயலும் திமுக தமிழ் மொழிக்கு செய்யவில்லை. கருணாநிதி







தமிழை வளர்ப்பதை விட, வாக்கு வங்கிக்காக மொழி அரசியலையே அதிகம் செய்தார் என்ற அர்த்தம் பொதிந்த விமர்சனம் உள்ளது. கச்சத்தீவை விட்டுக் கொடுத்தது, முல்லைப் பெரியாறு மற்றும் காவிரி நதிநீர் பிரச்சனைகள் ஆகியவை திமுகவின் மீதான துரோக குற்றச்சாட்டுகளுக்கான ஆதாரங்கள். கருணாநிதி மற்றும் ஸ்டாலினுக்கு மாறாக, அண்ணா வழியில் வந்த தலைவர்களான எம்.ஜி. ஆர், ஜெயலலிதா, மற்றும் எடப்பாடி பழனிசாமி ஆகியோர் உண்மையான திராவிடத் தலைவர்களாக பார்க்கப்படுகிறார்கள். திமுகவின் போலி திராவிடக் கொள்கை என்பது, அதிமுக தலைவர்களால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்படாத ஒன்றாகவே இருந்து வருகிறது. குடும்ப வாரிசு அரசியல் மற்றும் மொழி உணர்வுகளைத் தேர்தல் வெற்றிக்காகப் பயன்படுத்தியது ஆகியவை திமுகவின் திராவிட அரசியலின் மீதான மக்களின் விமர்சனங்களாக உள்ளன. பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தங்களை அதிகாரப்பூர்வமாக நடைமுறைப்படுத்தியதன் மூலம், எம்.ஜி. ஆர். தமிழ் மொழிக்கும் அதன் பயன்பாட்டிற்கும் புதிய ஆற்றலை வழங்கினார். இந்தச் செயல், அதிமுகவின் திராவிடப் பாரம்பரியம், வெறும் அரசியல் சித்தாந்தம் மட்டுமல்ல, அது மக்களின் வாழ்வோடு கலந்த செயல் என்பதை வெளிப்படுத்துகிறது.



திராவிடம் வெறும் சொல் இல்லை. அது மக்களின் வாழ்வியலுக்கான தூய அரசியல்.





# புரட்சித் தமிழரின் கல்வி புரட்சி:

## 7.5% நாயகன்

**- அருண் ஜெயபிரகாஷ்**

தமிழ்நாட்டில் நீட் தேர்விற்குப் பின்னால் பல துரோகங்களும், அவதூறுகளும், இளைய தலைமுறையின், கண்ணீரும், கனவும், தற்கொலைகளும் இருக்கிறது.அதற்கு முதன்மையான காரணம் திராவிட முன்னேற்றக் கழகம்.நீட் தேர்வை எதிர்க்கும் அதே திமுக அரசு, இன்று அரசுப் பேருந்துகளில் நீட் பயிற்சி மையங்களை விளம்பரப்படுத்தும் அரசு தான் இந்த விடியா திமுக அரசு.

“ஸ்டாலின் தான் வராரு விடியல் தர போறாரு” என்று மக்களை ஏமாற்றி இன்று தமிழ்நாட்டையே இருண்ட பாதையில் அழைத்துச் சென்ற முடி சூட்டிய மன்னர் தான் ஸ்டாலின். அவர் மகன் முடிசூடா மன்னன் உதயநிதி ஸ்டாலின் நீட் தேர்வு ரத்து செய்ய ரகசியம் உள்ளது எனக் கூறி மாணவர்களின் உயிரையும் கனவையும் பறித்தார்.தமிழ்நாட்டில் இன்று மிகப்பெரிய கேள்வி எழுந்திருக்கிறது. நீட் தேர்வு ரகசியம் என்ன?அதே சமயம் உண்மையான அறிஞர் அண்ணாவின் விழியில் தொலை நோக்கு பார்வை கொண்ட, 2017-2021 வரை தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த எடப்பாடி கே.பழனிசாமி இதற்காக என்ன செய்தார் என்பதை விரிவாக இக்கட்டுரையில் காண்போம். 2010 ஆம் ஆண்டு, ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியின் போது இந்திய மருத்துவ கவுன்சிலால் (MCI) மருத்துவ நுழைவுத் தேர்வு முதன்முதலில் முன்மொழியப்பட்டது. அப்போது ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் திமுக முக்கிய பங்கு வகித்திருந்தும் நாடாளுமன்றத்திலோ அல்லது அமைச்சரவையிலோ எந்த ஓர் எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை.





2010-2011 ஆம் ஆண்டில் UPA அமைச்சரவையின் ஒப்புதலுடன் நீட் தேர்வு கொண்டுவரப்பட்டது. அப்போது திமுக அமைச்சர்கள் முக்கிய இலாகாக்களை வகித்தனர். எஸ். காந்திசெல்வன், மத்திய அமைச்சரவையில் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை இணை அமைச்சராகப் பதவி வகித்தார். இதன் மூலம் நீட் தேர்வின் பிறப்பிடம் திமுக ஆட்சியில் என்பது நிரூபணமாகிறது. 2013 ஆம் ஆண்டில்,உச்ச நீதிமன்றம் நீட் தேர்வு ரத்து செய்தது. பின் 2016 ஆம் ஆண்டில், உச்ச நீதிமன்றம் அதன் முந்தைய தீர்ப்பை மாற்றியமைத்து, இந்தியா முழுவதும் நீட் தேர்வைக் கட்டாயமாக்கியது.அப்போதைய முதலமைச்சர் செல்வி ஜெ.ஜெயலலிதா, நீட் தேர்வைக் கடுமையாக எதிர்த்து சட்டப் போராட்டம் நடத்தி அறிஞர் அண்ணா வழியில் தமிழ்நாட்டின் மாநில சுயாட்சிக்காகப் போராடினார்,இதன் விளைவாக 2016 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டிற்கு ஒரு வருட நீட் விலக்கு அளித்தது உச்சநீதிமன்றம். பின் 2017-ம் ஆண்டில் நீட் தேர்வு தமிழ்நாட்டில் கட்டாயமாக்கப்பட்டது.இதன் பின்னர் திமுக தன் நிலைப்பாட்டை மாற்றி அரசியல் லாபத்திற்காக நீட் தேர்விற்கு எதிராகக் கொடி பிடிக்கத் தொடங்கியது.

## அண்ணா திராவிட வழியில் எடப்பாடியார்:

நீட் தேர்வை ரத்தினக் கம்பலத்தை விரித்து வரவேற்ற திமுக, எடப்பாடி கே.பழனிசாமி முதலமைச்சராக இருந்த காலக்கட்டத்தில் (2017-2021) நீட் தேர்வு ரத்து செய்ய வேண்டுமென்றும் அதிமுக ஆட்சியில் நீட் கொண்டுவரப்பட்டது என்றும் இரட்டை வேடம் போட்டு மக்களை ஏமாற்றத் தொடங்கியது. ஆனால் திமுகவின் அவதூறுகளைப் பொருட்படுத்தாமல் எடப்பாடி.கே.பழனிசாமி அறிஞர் அண்ணா வழியில் தொலை நோக்கு சிந்தனையுடன் சிந்தித்து மாணவர்களுக்குத் திறம்பட மருத்துவக் கல்வியை வழங்கினார். நீட்- க்கு எதிரான சட்ட போராட்டத்தை தொடர்ந்துகொண்டு, அரசு பள்ளி மாணவர்களுக்கு 7.5% மருத்துவ உள் ஒதுக்கீடு, பயிற்சி மையங்கள், தொலைக்காட்சி வழிக் கல்வி எனத் தமிழ்நாட்டின் கல்வி வரலாற்றில் ஒரு பொன் அத்தியாயத்தை எழுதினார். அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5% மருத்துவ உள் இட ஒதுக்கீட்டை வழங்கினார்.இதனால் கடைக்கோடி கிராமங்களில் வசிக்கும் எழை எளிய விவசாயிகள், தினசரி கூலித் தொழிலாளர்களின் பிள்ளைகள் மருத்துவக் கல்வியைப் பயில உறுதி செய்தார்.மேலும் இந்த இடஒதுக்கீட்டின் மூலம் தகுதி பெறும் மாணவர்களுக்கு அரசாங்கமே விடுதி கட்டணம் மற்றும் கல்வி கட்டணம் முழுவதுமாக ஏற்கும் என எழை மாணவர்களின் வயிற்றில் பாலை வார்த்தார்.இந்த 7.5% இடஒதுக்கீட்டினால் 2818 ஏழை மாணவர்கள் இன்று மருத்துவராகியுள்ளனர்.மேலும் அவரின் சிறந்த நிர்வாகத்தால் ஒரே ஆண்டில் 11 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் திறக்கப்பட்டது. மாணவர்களுக்கு வறுமையினால் எந்த வாய்ப்பும் மறுக்கப்படக்கூடாது என்பதற்காக தேர்வு மையங்களுக்கு இலவச போக்குவரத்து வசதியை ஏற்படுத்திக் கொடுத்தார். இப்படி நீட் தேர்வு போர்வைக்குள் திமுகவைப் போல் ஒளியாமல் மாணவர்களுக்கு நேரடியாக எதிர்க்கொண்டு சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்தார்.

## போலி திராவிட மாடல்:

திராவிட மாடல் என்று சொல்லிக்கொண்டு சர்வாதிகாரத்தின் மொத்த உருவமாகச் செயல்படும் திமுக அரசு, இன்று மக்களை ஏமாற்றி திராவிடத்தின் நிழலில் ஒளிந்து கொண்டு செயல்படுகிறது.மாணவி அனிதா தற்கொலைக்குப் பின்பு ஆட்சிக்கு வந்தவுடன் நீட் தேர்வு ரத்து செய்யப்படும் எனப் பொய்யான வாக்குறுதிகளைக் கொடுக்க தொடங்கியது.2021 தேர்தலில் திமுகவின் பிரதான தேர்தல் வாக்குறுதியாக ஆட்சிக்கு வந்தவுடன் முதல் கையெழுத்து நீட் தேர்வு ரத்து என்றும் நீட் தேர்வை ரத்து செய்ய ரகசியம் உள்ளது என்றும் தந்திரமாக ஆட்சியமைத்தது திமுக. இப்பொழுது நீட் ரகசியம் என்னவென்று கேட்டால் உச்ச நீதி மன்றம் தீர்ப்பு எனவே நீட் ரத்து செய்யமுடியாது என தன் கைவரிசையைக் காட்டிவிட்டது.இதன் விளைவாக 25 மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டனர், இதற்கு திமுக அரசு முழுவதுமாக பொறுப்பேற்க வேண்டும்.மேலும் நீட் தேர்வு ரத்து செய்ய ஒரு கோடி மக்களிடம் கையெழுத்து பெற்று சேலத்தில் நடைபெற்ற மாநில திமுக இளைஞரணி மாநாட்டில் மனுவுடன் சேர்த்து மக்கள் நம்பிக்கையும் காற்றில் பறக்க விட்டது திமுக.இப்படிப் பதவிக்காகத் தந்திரமாகக் கபட நாடகம் ஆடிய திமுக பெயரளவில் அறிஞர் அண்ணாவையும் தந்தை பெரியாரையும் வைத்து போலி திராவிடம் பேசி திராவிட சித்தாந்தத்தை அடியோடு அழித்து வருகிறது.

## தலையங்கம்

# அண்ணா வழி திராவிடம் – உண்மையின் குரல்



மனித குலத்தின் மாபெரும் மற்றும் மிக முக்கியமான விழுமியங்களில் ஒன்று, பன்மைத்துவத்தின் மூலமாகவே ஒட்டுமொத்த மனித குலத்திற்கான முன்னேற்றத்தை அடையமுடியும் என்பது தான்!

அதே வேளையில் ஒவ்வொரு இனத்திற்கும் உரியதான தனித்துவமான அடையாளங்களை விட்டுவிடாமல் பேணிகாத்திடவும் விரும்புகிறது மனித இனம்.

இவ்விரண்டிற்குமான இடையிலான அரசியலைத் தான் அறிஞர் அண்ணா நமக்காக சிந்தித்து தத்துவமாக்கிச் சென்றிருக்கிறார்.

அண்ணா முன்னிறுத்திய திராவிடம் ஆரியத்திற்கு மாற்றானது, எதிரானது என்பது வெளிப்படையான உண்மையாக இருப்பினும், 'பிறப்பால் ஆரியத்தைச் சேர்ந்த ஒருவர், உணர்வால் திராவிடர் ஆகலாம். ஆரியம் பிறப்பில் இல்லை அது கருத்தில் உள்ளது. திராவிடராய்ப் பிறந்து சாதியத்தை நெஞ்சில் சுமப்போரும் ஆரியரே' என்கின்ற அவருடைய விரிவும் தெளிவும் அவரை சர்வதேசியவாதியாக்குகிறது.

எனவே தான் அவரால், 'நாடு என்பது பூகோளப்படம் அல்ல, அங்கு வசிக்கும் மக்களின் உணர்ச்சித் தொகுப்பு' என்று சொல்ல முடிந்தது!

சமத்துவம் என்பது எல்லோரையும் சமமாக நடத்துவது அல்ல, எல்லோர்க்கும் 'சமவாய்ப்பு' அளிப்பது என்பது தான் இன்றும் அண்ணா வழி திராவிடமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றது.

எம்ஜிஆர் கூறியது போல், அரசியல் உலகில் அண்ணா நமக்கு அறிவூட்டும் கடவுள்' என்னுடைய வாழ்க்கையின் குறிக்கோள் என்றால் அது அண்ணா சுட்டிக்காட்டிய வழியில் நடந்து செல்வது, அண்ணாவின் குறிக்கோள்களுக்குச் செயல்வடிவம் தருவது, நிறைவேற்றப்படாத அண்ணாவின் திட்டங்களை நிறைவேற்றுவது என்பது தான் எனது குறிக்கோள் என்று கூறிச்சென்றார்.

எனவே அண்ணா வழி திராவிடம் என்பது தமிழ் மக்களின் அரசியல்! தமிழினம் தன்னைத் தானே ஆண்டுகொள்ளும் கலையினை பழக்கிய ஒரு தலைவனின் வழி....

அண்ணாவை, அவருடைய முக்கியத்துவத்தை, அவர் கண்ட திராவிட வழியை இளைய தலைமுறைக்கு அறிமுகப்படுத்தும் விதமாக 'அண்ணா வழி திராவிடம்' என்கின்ற இந்த இதழ் துவங்கப்பட்டிருக்கிறது.

- ஆசிரியர் குழு

# உண்மைத் திராவிடம் பேசுவோம்

## வி.ஏ.ஓ எனப்படும் கிராம நிர்வாக அலுவலர் பணி! புரட்சித்தலைவர் நிகழ்த்திய சரித்திர சாதனை!

### கிராம முன்சீப், கர்ணம், தலையாரி. இந்த மாதிரி பெயர்களை இதற்கு முன் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

நீங்கள் 80க்குப்பிறகு பிறந்தவராக இருந்தால் இந்தப் பெயர்களைக் கேட்டிருக்க வாய்ப்பு குறைவு. கிராமங்களை நிர்வகிக்க பிரிட்டிஷ் காலத்தில் இருந்து நீடித்து வந்த பதவிகள், பொறுப்புகள் இவை. தமிழகத்தில் கிராம முன்சீப், கர்ணம், மணியம் போன்ற பதவிகள் நூறு சதவிகிதம் உயர்சாதியினர் கைகளில் இருந்தன. அரசாங்க சம்பளத்துடன் பரம்பரை பரம்பரையாக இந்தப் பதவிகள் தொடர்ந்தன. ஒட்டுமொத்த கிராம நிர்வாகமும் ஒரே குடும்பத்தின் கையில் இருந்தது.

ஏழை எளியவர்கள், தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்கள் தங்களது சொந்த வேலைக்காக முன்சீப்பையோ, கர்ணத்தையோ பார்க்க அவர்களது வீட்டுக்குப் போனால் கைகட்டி வாய் பொத்தி மணிக்கணக்கில் நிற்க வேண்டிய நிலை இருந்தது. சான்றிதழ் வாங்க மணிக்கணக்கில் கால்கடுக்க காத்திருக்க வேண்டிய நிலை.
தவிர, பட்டியலின, பழக்குடியின மக்களில் யாரும் முன்சீப், மணியக்காரர் பதவிகளை நினைத்துக்கூட பார்க்க முடியாத நிலை இருந்தது.

இந்தியா விடுதலை அடைந்து 33 ஆண்டுகளாகியும் தமிழகத்தில் இதேநிலைதான் நீடித்து வந்தது. சமூகநீதிக்கே நாங்கள்தான் அதாரிட்டி என்று கூறிக்கொண்ட கருணாநிதி ஆட்சியிலும்கூட இதேநிலைதான் நீடித்தது குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையில்தான் புரட்சித்தலைவர் எம்ஜிஆர் 1977ஆம் ஆண்டு தமிழகத்தின் முதல்வரானார். 1980ஆம் ஆண்டு அவரது ஆட்சி கலைக்கப்பட்டது.

1980ஆம் ஆண்டு ஜுன் மாதம் மீண்டும் ஆட்சிக்கு வந்த புரட்சித்தலைவர், அவரது இரண்டாவது பதவிக்காலத்தின் தொடக்கத்தில் ஓர் அதிரடி முடிவை கையில் எடுத்தார். அது என்ன அதிரடி முடிவு என்பீர்கள். படிப்பறிவற்ற, பரம்பரை கிராம முன்சீப், கர்ணம், மணியம் போன்ற பதவிகளை ஒழித்துக்கட்டி விட்டு, படித்த இளைஞர்களை கிராம நிர்வாக அலுவலர்களாக நியமிக்கும் முடிவு அது.

கிராம நிர்வாகப் பதவி, குறிப்பிட்ட சமூகம், குறிப்பிட்ட சில குடும்பங்களுக்கு மட்டுமே சொந்தமாக இருக்கக்கூடாது என நினைத்தார் முதலமைச்சர் எம்.ஜி.ஆர்.
இதற்காக பகுதி நேர, பரம்பரை கர்ணம், மணியக்காரர் முறையை அவசர சட்டம் மூலம் ரத்து செய்துவிட்டு அனைத்து சாதியினரும் கிராம நிர்வாக அலுவலராகலாம் (VAO) என புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சட்டம் கொண்டு வந்தார்.
'பரம்பரை கிராம நிர்வாக அலுவலர் பணி என்பது காலத்துக்கு ஒவ்வாதது. அது பழைய காலத்து முறை. நவீன தேவைகளுக்கு அது பொருத்தமாக இல்லை. தற்கால கிராம நிர்வாகச் சூழலுக்கு அது ஏற்றதல்ல .எனவே மாநில அரசு இதை கவனமாக ஆராய்ந்து பரிசீலித்து கொள்கை முடிவு எடுத்திருக்கிறது. நிர்வாக தேவை கருதி புதிய திட்டம் அறிமுகம் செய்யப்படுகிறது' இவ்வாறு அந்த அவசர சட்டத்தில் கூறப்பட்டிருந்தது.

1980 நவம்பர் 14 அன்று இந்த அவசர சட்டம் நடைமுறைக்கு வந்தது. நவம்பர் 13 அன்று இரவில் இந்த அவசர சட்டத்தால் 24,000 பாரம்பரிய பதவிகள் காலாவதியாயின.

ஊராட்சி நிர்வாகத்தில் எம்ஜிஆர் செய்த இந்த புதிய மாற்றம், ஒரு சரித்திர புரட்சி. சமூகநீதிக்கான பாதையில் இதை ஒரு மைல்கல் என்றே கூற வேண்டும்.

இதன்மூலம், குறைந்தபட்ச கல்வித் தகுதி கொண்ட

அதாவது பத்தாவது வரை மட்டுமே படித்த கிராமப்புற இளைஞர்களுக்கு, வி.ஏ.ஓ எனப்படும் கிராம நிர்வாக அலுவலர் என்ற முழுநேர அரசுப் பணி கிடைத்தது. தேவையானஅதிகாரம் அவர்களுக்கு வழங்கப்பட்டது. பிற அரசு ஊழியர்களைப்போலவே அடிப்படை சம்பளம், படித்தொகை அவர்களுக்கு வழங்கப்பட்டது. இந்த அவசர சட்டம் மூலம் கிராமப்புறத்தில் வேலை வாய்ப்பு உறுதி செய்யப்பட்டது. கிராம நிர்வாக அலுவலர் பணியில் இடஒதுக்கீடு கொண்டு வரப்பட்டது. இந்த இடஒதுக்கீடு மூலம் எஸ்.சி., ஓ.பி.சி,. பிரிவினர் அதிக எண்ணிக்கையில் பலன் அடைந்தனர்.

பல நூறு ஆண்டுகளாக புறக்கணிக்கப்பட்டு வந்த தாழ்த்தப்பட்ட, பழங்குடியின சமூகத்தினரும் வி.ஏ.ஓ ஆனார்கள். இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட பட்டியலின சமூக இளைஞர்களுக்கு வி.ஏ.ஓ வேலை கிடைத்தது.

1981ஆம்ஆண்டு இந்த அவசர சட்டத்தை மாற்றுவதற்கான மசோதா சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அப்போது திமுக, காங்கிரஸ் கட்சிகள் வெளிநடப்பு செய்தன. அப்போதைய வருவாய்த்துறை அமைச்சர் எஸ்.டி. சோமசுந்தரம், பதவியிழந்த பரம்பரை கிராம நிர்வாகிகளுக்கு மொத்தம் 5 கோடி ரூபாய் இழப்பீடு வழங்கப்படும் என உறுதியளித்தார். மறுநாள், 1981 மார்ச் 2ஆம் தேதி இந்த மசோதாவுக்கு ஆளுநர் சாதிக் அலி ஒப்புதல் அளித்தார்.


இதன்மூலம் ஊருக்கு ஓர் அரசு அலுவலரை உருவாக்கி எம்.ஜி.ஆர் சமூகநீதி காத்தார். அவர் செய்த சமூகப் புரட்சி சமூக சீர்திருத்த சட்டமாகப் பார்க்கப்பட்டது. எதிர்கால இளைஞர்களை மனதில் கொண்டு தொலைநோக்கு பார்வையுடன் எம்.ஜி.ஆர் இப்படி ஒரு புதிய வரலாறு படைத்தார். இந்த கீழ் மட்ட சமூகப் புரட்சி மட்டும் நடந்திருக்காவிட்டால் இன்னும் பல கிராமங்களில் குறிப்பிட்ட சில சான்றிதழ்கள் வாங்க விளிம்புநிலை மக்கள், ஆண்டைகள் வீட்டு வாசலில் காத்திருக்க வேண்டிய அவல நிலைதான் இருந்திருக்கும். இப்போதோ அத்தியாவசிய சான்றிதழ்கள், இருப்பிட, சாதி, வருமான சான்றிதழ்கள் வாங்க ஒருவரது வீட்டுக்குப் போய் காவல் காக்கும் நிலை மாறி, அரசு அலுவலகத்துக்குப் போய் பயன்பெறும் நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழக வரலாற்றில் எந்த ஓர் அரசு அலுவலர்கள் சங்கமோ ஓய்வு பெற்ற அரசு அலுவலர் சங்கமோ அரசியல்வாதி ஒருவருக்கு சிலை வைத்ததில்லை. ஆனால், கிராம நிர்வாக அலுவலர்களின் பல்வேறு அமைப்பினர் ஒன்றுகூடி, 2021ஆம் ஆண்டு புரட்சித்தலைவர் எம்ஜிஆருக்கு முழு உருவ வெண்கல திருவுருவ சிலையை அமைத்தனர். ஒன்பதரை அடி உயரம் கொண்ட அந்த சிலை, சிவகங்கை மாவட்டம் அமராவதிபுதூர் பகுதியில் அமைக்கப்பட்டது.

தற்போது தமிழ்நாட்டில் 69% இட ஒதுக்கீட்டின் மூலம் ஏறத்தாழ 12,614 கிராம நிர்வாக அலுவலர்கள் பணியாற்றுகிறார்கள். டி.என்.பி.எஸ்.சி மூலம் போட்டித்தேர்வுகள் நடத்தப்பட்டு வி.ஏ.ஓ.க்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள். எம்.ஜி.ஆர் நிகழ்த்திய இந்த அரிய சாதனை, மக்கள் என்றுமே மறந்து விடக்கூடாத சாதனை. இதுபோன்ற புரட்சிகர திட்டங்களைக் கொண்டு வந்ததால்தான் எம்ஜிஆர் இன்றும் மக்கள் மனங்களில் தொடர்ந்து வாழ்கிறார்.

சரி. புரட்சித்தலைவர் கொண்டு வந்த இந்த புரட்சிகர திட்டம் இப்போது எப்படி இருக்கிறது? 2023ஆம் ஆண்டு, தூத்துக்குடியில் லூர்து பிரான்சிஸ் என்ற கிராம நிர்வாக அலுவலர் படுகொலை செய்யப்பட்டார். அதைக்கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. கிராம நிர்வாக அலுவலர்களுக்குத் தற்காப்புப் பயிற்சியும், துப்பாக்கியும் வழங்குவது பற்றி பரிசீலிக்க வேண்டும் என்று கோரிக்கைகள் எழுந்தன. ஆக, புரட்சித்தலைவர் கொண்டு வந்த இந்த திட்டம் மூலம் கிராம நிர்வாக அலுவலர்களாக ஆனவர்கள் இன்று பாதுகாப்புக்காக துப்பாக்கி கேட்க வேண்டிய பரிதாப நிலையில் இருக்கிறார்கள்.

வி.ஏ.ஓ.க்கள் பலர் இப்போது அவரவர் பணியில் இருக்கும் கிராமங்களில் வசிக்காமல், நகரங்களில் வசிக்கும் அவல நிலையும் உள்ளது. புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் கொண்டுவந்த இந்த வி.ஏ.ஓ திட்டத்தை வரலாறு மறந்து விடக்கூடாது. அதை மீண்டும் மீண்டும் நினைவூட்டிக் கொண்டே இருக்க வேண்டியது நமது கடமை.



# திமுகவின் நிதி மேலாண்மை தோல்வி

## தனியார் மயமாகும் அரசு போக்குவரத்து கழகம்

- சரண்யா

திராவிடச் சித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கையானது பாகுபாடற்ற சமத்துவச் சமூகத்தை உருவாக்குவதுதான். சமூக நீதியை அடைவதற்கு இது முதல் படியாகும். திராவிடச் சித்தாந்தத்தின் அடிப்படையிலான அரசாங்கம் தனிப்பட்ட நபர்களின் நலன்களைவிட மக்களின் ஒட்டுமொத்த நலனுக்கு முன்னுரிமை அளிக்கும். இந்தச் சித்தாந்தம் அடிப்படையில் இடதுசாரி சார்புடையது. திராவிடக் கட்சிகள் வலதுசாரி கொள்கைகளை ஒருபோதும் ஆதரித்தது இல்லை என்பதுதான் வரலாறு. குறிப்பாக, அரசு-தனியார் கூட்டாண்மை (Public Private Partnership) மாதிரியின்மூலம் செய்யப்படும் தனியார்மயமாக்கல், மக்கள் நலனுக்கு எதிரானதாகவும், வலதுசாரி நிகழ்ச்சி நிரலை நோக்கிய நகர்வாகவும்தான் கருதப்படுகிறது.

சமீபகாலமாக, திமுக அரசு ஊழியர்கள் அல்லது தொழிலாளர் நலனில் அக்கறை செலுத்தாமல், பொதுப் போக்குவரத்தைத் தனியார்மயமாக்கி வருகிறது. இந்த நடவடிக்கையால் 2,192 பணியிடங்கள் (1,172 நடத்துநர்கள் மற்றும் 1,020 ஓட்டுநர்கள்) பாதிக்கப்பட்டுள்ளன. பெருநகரப் போக்குவரத்துக் கழகத்தில் (MTC) 3,000 ஓட்டுநர்களுக்கும் நடத்துநர்களுக்கும் பற்றாக்குறை இருந்தபோதிலும், அரசு அந்தக் காலிப்பணியிடங்களை நிரப்பாமல் தனியார்மயமாக்குவதைத் தேர்ந்தெடுத்துள்ளது. ஒரு அரசாங்கம் திறனற்றதாகமாறும்போதோ அல்லது தோல்வியடையும் போதோதான் பொதுவாகத் தனியார்மயமாக்கல் நிகழும். திமுக அரசு தோல்வியடைந்துவிட்டதா? மக்களின்நலன் என்பது திராவிடச் சித்தாந்தத்தின் குறிக்கோளாக இருந்தாலும், திமுக இந்தக் கொள்கைக்கு எதிராகச் செயல்பட்டு, தோல்வியடைந்து வருவதாகத் தெரிகிறது. தனியார் நடத்துநரின் மாதச் சம்பளமான ரூ.26,750, மாநகரப் போக்குவரத்துக் கழக ஓட்டுநரின் அடிப்படைச்சம்பளத்தைவிட (ரூ.17,700) அதிகமாக இருக்கலாம். ஆனால், நிரந்தரமான மாநகரப் போக்குவரத்துக் கழக ஊழியருக்கு வழங்கப்படும் முழுமையான ஊதியம் மற்றும் சலுகைத் தொகுப்பு, பதவி உயர்வு வாய்ப்பு மற்றும் நீண்ட காலப் பாதுகாப்பு உள்ளிட்ட விரிவான பலன்களைக் கொண்டுள்ளது. மாநகரப் போக்குவரத்துக் கழக ஓட்டுநர்களின் நலன் இந்த நீண்டகாலச் சலுகைகள் மற்றும் பணிப்பாதுகாப்பின் மூலமே பாதுகாக்கப்படும் என்பதும் தெளிவாகிறது. ஒருகாலத்தில் இடஒதுக்கீட்டுக்காகப் போராடிய அண்ணா திராவிடக் முன்னேற்ற கழக கட்சி, சமூகநீதியைக் கொண்டுவந்து சமத்துவத்தை உருவாக்கி மக்கள் மனதில் நம்பிக்கையை பெற்று இருந்தது. ஆனால், இன்று திமுக ஆட்சியில் தனியார்மயமாக்கல் தொடர்ந்து கொண்டு இருக்கிறது. ஓட்டுநர்களாகவும், நடத்துநர்களாகவும் பெரும்பாலும் ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களே இருக்கின்றனர். இந்த சமூகத்தினர் மக்களுக்கு இடஒதுக்கீடு என்பது அவசியம் ஆனது. ஏனெனில், தனியார்மயமாக்கப்பட்ட சேவைகளுக்கு இடஒதுக்கீட்டுக் கொள்கைகள் பொருந்தாது என்பதால் இது நிச்சயமாக இந்தச் சமூகத்தினரைப் பாதிக்கும். தற்போது, சென்னையில் நான்கு பேருந்து பணிமனைகள் தனியார்மயமாக்கப்பட்டுள்ளன. அடுத்த மாதம் மதுரை மற்றும் திருச்சியில் உள்ள பணிமனைகளைத் தனியார்மயமாக்கத்திட்டங்கள்



நிகழ்ந்து வருகின்றன. இது ஓட்டுநர் சங்கங்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரின் பெரும் போராட்டங்களுக்கு வழிவகுத்துள்ளது.

இலவச பயணம் என்ற போர்வையில், மிக குறைந்த அளவில் மகளிருக்கான இலவச பேருந்துகளை இயக்கி பெண்களை வஞ்சிப்பது மட்டுமில்லாமல், போக்குவரத்து ஊழியர் குடும்பத்தினரையும் வஞ்சிக்கிறது. 2000-ம்ஆண்டில் டெல்லி மற்றும் மும்பையில் பேருந்து சேவைகள் தனியார்மயமாக்கப்பட்டபோது, சேவையின் தரம் படிப்படியாகக் குறைந்தது. பயணிகள் பல பிரச்சனைகளை எதிர்கொண்டதுடன், பாதுகாப்பற்றதாகவும் உணர்ந்தனர். இந்தப் பேருந்துகள் ‘கொலைகாரப் பேருந்துகள்’ (Killer Bus) என்று கூட அழைக்கப்பட்டன.

இதன்விளைவாக, 2008-ல் பேருந்து சேவைகள் மீண்டும் மாற்றியமைக்கப்பட வேண்டியிருந்தது. புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். மற்றும் புரட்சி தலைவி அம்மாவின் ஆட்சிக் காலத்தில், தமிழ்நாட்டின் பேருந்து சேவைகள் கணிசமாக மேம்பட்டன. ஆனால், தற்போதைய நிலைமை சேவையின் தரத்தை மோசமடையச் செய்கிறது. தனியார்மயமாக்கல் நிலைமையை இன்னும் மோசமாக்கும்.






1972-ஆம் ஆண்டு, கருணாநிதி பேருந்து வழித்தடங்களை நாட்டுடைமையாக்கி, தமிழகத்தில் அரசுப் போக்குவரத்துக் கழகங்களை நிறுவினார். ஆனால், அவரது வாரிசான தற்போதைய ஸ்டாலின் அரசு பொதுப் போக்குவரத்தை தனியார் மயமாக்கும் முயற்சியில் இறங்கி இருக்கிறார். ஸ்டாலினின் திராவிட மாடல் அதன் அடிப்படைக் கொள்கையில் தோல்வியடைந்து, மக்களைத் தவறாக வழிநடத்துகிறது. திமுக, பொது நலன் என்ற அனைத்து அம்சங்களிலும் தோல்வியடைந்து, ’திராவிடம்’ என்ற பெயரை மட்டுமே வைத்துக் கொண்டு, செயலில் அவ்வாறு இல்லாதது போல் தெரிகிறது. திராவிடச் சித்தாந்தம் என்பது சமூக நீதியுடன் சமத்துவச் சமூகத்தை உருவாக்கப் போராடுவது எனும்போது, திமுக இப்போது அதன் உறுப்பினர்களுக்கும், அவர்களின் குடும்பங்களுக்கும் பயனளிக்கும் ஒப்பந்தங்கள் மற்றும் வணிக முயற்சிகளுக்கு முன்னுரிமை அளிக்கிறது. உண்மைத் திராவிடம் சாமானிய ஏழை எளிய தொழிலாளர்களின் நலனில் அக்கறை செலுத்துவதில் தான் துவங்குகிறது.

# போலி திராவிட மாடல் பாவங்கள்

- ராகுல் சீனிவாசன்

- கள்ளக்குறிச்சியில் ஓராண்டுக்கு முன்பு தமிழ்நாடெங்கும் ஒலித்தது துயரத்தின் ஓலம். உயிர் பிழைத்தவர்கள் இன்றும் மரணத்துக்கு நெருக்கமான ஒரு வாழ்வை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.
- இப்பகுதியில் கள்ளச்சாராய புழக்கம் அதிகமாக இருக்கிறது என்று எதிர்க்கட்சி தலைவர் சுட்டிக்காட்டினார். மேலும் அந்த தொகுதி சட்டமன்ற உறுப்பினர் உட்பட பலரும் விடியா மாடல் அரசுக்கு வலியுறுத்தியும், இந்த ஸ்டாலின் மாடல் ஆட்சி மௌனம் காத்தது.
- கடந்த 2024 ஜூன் 17 - 18ஆம் தேதிகளில் கள்ளக்குறிச்சியின் மையப்பகுதியில் அமைந்திருக்கும் கருணாபுரம் பகுதியில் நினைத்துக்கூட பார்க்க முடியாத ஒரு துயரம் நிகழ்ந்தது. அந்தப் பகுதியில் விற்ற கள்ளச்சாராயத்தை வாங்கிக் குடித்தவர்களில் சுமார் 65 பேர் உயிரிழந்தனர். பல வீடுகளின் வாயிலில் சடலங்கள் கிடத்தப்பட்டிருந்தன. ஊரை சுற்றி எங்கு பார்த்தாலும் மக்கள் கண்ணீர் வடித்தார்கள்.
- கள்ளக்குறிச்சியின் மையப்பகுதியில் அமைந்திருக்கும் கருணாபுரத்தில் வசித்துவந்த கூலித் தொழிலாளர்களில் பலர், ஜூன் 17ஆம் தேதி அருந்திய சாராயத்தில் மெத்தனால் கலந்திருந்தது. இந்த மெத்தனால் கலந்த சாராயத்தை அருந்தியவர்களில் பலருக்கு கண் பார்வை மங்குவது, வயிற்றுப்போக்கு, கை, கால் மரத்துப்போதல் போன்ற பிரச்னைகளுக்காக கள்ளக்குறிச்சி மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு வரத் துவங்கினர்.
- இவர்களில் சுரேஷ் என்பவர் உயிரிழக்க, அப்பகுதியில் பதற்றம் தொற்ற ஆரம்பித்தது. மேலும் அதிக நபர்கள் மருத்துவமனையில் சேர ஆரம்பித்தனர். வெகுவிரைவிலேயே பலரது நிலைமை மோசமாக ஆரம்பித்தது. இதற்குப் பிறகு அடுத்தடுத்து பலரது உடல்நிலை மோசமாகி, மரணமடையத் துவங்கினார்கள். கள்ளக்குறிச்சி அரசு தலைமை மருத்துவமனையில் ஆட்கள் குவிய ஆரம்பிக்க, பலர் சேலம் அரசு தலைமை மருத்துவமனைக்கும் புதுச்சேரியில் உள்ள ஜிப்மர் மருத்துவமனைக்கும் அனுப்பப்பட்டனர்.
- இதற்குப் பிறகும் உயிரிழப்புகள் தொடர்ந்தன. முடிவில், மெத்தனால் கலந்த சாராயத்தைக் குடித்ததால் குறைந்தது 65 பேர் உயிரிழந்திருந்தனர். மருத்துவமனையில் சிகிச்சைபெற்றுவந்தவர்களில் சிலருக்கு முழுமையான பார்வையிழப்பு ஏற்பட்டது. பலர் நீடித்திருக்கக்கூடிய உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டனர். உயிரிழந்தவர்களின் சடலங்கள் மொத்தமாக வைத்து தகனம் செய்யப்பட்டன. இந்த நிகழ்வுக்குப் பிறகு, மாவட்ட ஆட்சியர் இடமாற்றம் செய்யப்பட்டார். காவல்துறை கண்காணிப்பாளர், மதுவிலக்குப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என பத்து காவல்துறை அதிகாரிகள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர். கள்ளச்சாராயம் விற்றவர்கள், சப்ளை செய்தவர்கள், மெத்தனால் வழங்கியவர்கள் என திமுக நிர்வாகி உட்பட 24 பேர் கைது செய்யப்பட்டனர்.
- செத்து மடிந்து கிடந்த நம் தமிழக மக்களை கூட பார்க்காமல் ஸ்டாலின் புறக்கணித்தார். கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு கடைசி வரை செல்லவில்லை. மக்கள் ஓட்டுகளை வாங்கிக்கொண்டு மக்களின் உயிர்களை காவு வாங்கிய விடியா மாடல் ஆட்சி. இன்றும் மறக்க முடியாத சம்பவம்.



# அண்ணா திராவிடத்தால் உயர்ந்தோம்

- தி.க.கவிதா

## சத்துணவு திட்டம்:

### ஏழைகளின் கல்வி மற்றும் ஆரோக்கிய வளர்ச்சிக்கு பெரும் அடித்தளம்

தமிழ்நாட்டின் முன்னேற்ற பாதையில் மிக முக்கியமான திட்டங்களுள் முதன்மையான திட்டம் சத்துணவு திட்டம். இந்த திட்டம், ஏழை, எளிய குழந்தைகளுக்கும், ஊட்டச்சத்து குறைபாடுள்ள மாணவர்களுக்கும், பெண்கள் மற்றும் புறக்கணிக்கப்பட்ட மக்களுக்கான ஒரு ஒப்பற்ற முன்னேற்ற வழிகாட்டியாக அமைந்திருக்கிறது. 1982 ஆம் ஆண்டு, ஜூலை 1 ஆம் தேதி, அண்ணாவின் திராவிடத்தை பின் பற்றி வந்த அன்றைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். இது, தமிழகத்தின் சமூக நலத்திற்கு மாபெரும் ஆற்றலை கொண்ட ஒரு திட்டமாகும். இந்தியா போன்ற வளரும் நாடுகளில் தற்போது கூட பல இடங்களில் குழந்தைகள் போதிய சத்தாண உணவுகள் கிடைக்காமல் பாதிக்கப்பட்டு வருவதாக பல்வேறு ஆய்வறிக்கைகள் அடிக்கடி வெளியாகி அதிர்ச்சிகளை கொடுக்கின்றன. தமிழ்நாட்டில் இது போன்ற பிரச்சனைகள் ஏற்படாமல் இருக்கக் காரணம் சத்துணவு என்னும் தொலை நோக்கு திட்டம்.

இந்தச் சிறந்த திட்டம், ஊட்டச்சத்து இல்லாத மாணவர்களுக்கு, குறிப்பாக பெண் குழந்தைகளுக்கு, சத்தான உணவு வழங்கி அவர்களின் உடல் மற்றும் மூளை வளர்ச்சியை தூண்டியது. சிறிய வயதிலேயே ஊட்டச்சத்து குறைபாடு, மற்றும் சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள், இந்த சத்துணவு திட்டத்தின் மூலம் கல்வி வளர்ச்சி, ஆரோக்கியம் மற்றும் நலன்களை பெற ஆரம்பித்தனர்.

இந்த திட்டத்தின் நோக்கம், ஏழை, எளிய குழந்தைகளுக்கு பசியினை நீக்கி கல்வி பசியை தூண்டுவதன் மூலம் அவர்களின் வாழ்வை உயர்த்துவதே ஆகும். இந்த திட்டம் வழியாக, மாணவர் சேர்க்கையின் அளவுகள் அதிகரித்தன, மேலும் பள்ளி இடைநிறுத்தல் விகிதங்கள் குறைந்தன. சத்துணவு பெறுவதற்காக பள்ளிக்கு சென்ற பலர் தங்கள் கல்வி பயணத்தை தொடங்கி முன்னேற்றம் அடைந்து இன்று உயரிய பொறுப்புகளில் இருக்கின்றனர். பலரும் இதை பெருமையாக சொன்னதை கேட்டிருப்போம். அவர்களுள் நானும் ஒருவன்.





இன்றைய நாட்களில் பெண்குழந்தைகளின் கல்வி விகிதம் அதிகரித்து வேலைவாய்ப்புகளில் ஆண்களுக்கு நிகராக பெண்களும் முன்னேறி வருவதற்கு ஆரம்பப் புள்ளி இந்த சத்துணவு திட்டம். இந்த திட்டம் கொண்டு வந்த காலக்கட்டத்தில் குறிப்பாக பெண்குழந்தைகளின் கல்வி விகிதம் குறைவாக இருந்தது. பெண் குழந்தைகளை குடும்பத்தின் பளு என கருதி பெண் சிசுக் கொலைகளும் அரங்கேறிய காலக்கட்டம் அது. பெண் குழந்தைகளின் வளர்ச்சிக்காக அண்ணா திராவிட கொடியில் விடிவெள்ளியாக பூத்த இதய கனி. ”நம்மலா சோறு போடப்போறோம் அரசாங்கம் தானே சோறு போடுது உசுரோட இருந்திட்டு போகட்டுமே” என்று பிறக்கும் பெண் குழந்தைகளை பெண் சிசு கொலைகளிலிருந்து விடுபட வைத்தது. சத்துணவு திட்டத்தின் மூலம், பல பெண்குழந்தைகள் பள்ளிக்குச் சென்று கல்வி கற்றுக் கொள்ளும் வாய்ப்பு பெற்றனர். இது, நாளடைவில், பெண்கள் பலவகைதிலும் முன்னேறி, சமுதாயத்தில் தலைசிறந்த இடங்களை பிடிக்க உதவியது.

கல்வி என்பது, ஏழைகளின் வாழ்க்கையை உயர்த்துவதற்கான மிக முக்கியமான கருவி. அது ஒன்றே சமூக ஏற்றத்தாழ்வுகளை அகற்றவும், அனைவருக்கும் சமமான உரிமைகளை அளிக்கவும் உதவுகிறது. இதற்கான அடித்தளம், சத்துணவு திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டது. மாணவர்கள், எந்த விதமான ஊட்டச்சத்து குறைபாடும் இல்லாமல், ஆரோக்கியமாக பள்ளியில் பயின்று, தங்களின் கல்வி பயணத்தை நிறைவேற்றும் வழி சாத்தியமாக அமைந்தது.

சத்துணவு திட்டத்தின் ஒரு முக்கிய தத்துவம், சமத்துவம் மற்றும் ஊட்டச்சத்து. அனைத்து மாணவர்களும் ஒரே இடத்தில் அமர்ந்து உணவு உண்டு, இது சாதி, மதம் மற்றும் பிற வேறுபாடுகளைக் கடந்து, சமுதாயத்தில் ஒற்றுமை மற்றும் சமத்துவத்தை வலுப்படுத்தும். இன்றும் இந்த பழக்கம் தொடர்வதால், தமிழ்நாட்டில் சமுதாயத்தில் சமநிலை உறுதி செய்யப்பட்டு வருகிறது.

சத்துணவு திட்டம், தமிழ்நாட்டில் ஒரு சாதனை படைத்த திட்டமாக விளங்குகிறது. இது, ஊட்டச்சத்து மற்றும் கல்வி குறைபாடுகளை நீக்கி, ஏழைகளின் வாழ்வாதாரத்தில் புதிய பரிமாணத்தை கொண்டு வந்துள்ளது. இந்த திட்டத்தின் மூலம், எம்.ஜி.ஆர். அவர்களால் மேற்கொள்ளப்பட்ட சமூக அணி செயல்பாடுகளின் வரலாறு, இந்திய அரசியல் மற்றும் சமூக முன்னேற்றத்தில் அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு வழிகாட்டியாக அமைந்தது.

புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்காலத்தில், பள்ளி குழந்தைகளுக்கு சுண்டல், பயறு போன்ற புரதச்சத்து கொண்ட தானிய உணவு வகைகளை வழங்கி மேம்படுத்தினார். அதே வழியில் வந்த, எடப்பாடியார் அவர்களும் முதலமைச்சராக இருந்த போது பரிட்சார்த்த முயற்சியாக தனியார் துறை பங்களிப்புடன், காலை உணவு திட்டத்தை முதல் கட்டமாக சென்னை மாநகராட்சி பள்ளிகளில் அறிமுகப்படுத்தினார்.

சத்துணவு ஏழைகளுக்கு மட்டும் அல்ல, தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த சமூகத்திற்கு உறுதியான அடித்தளம் மற்றும் ஒற்றுமைக்கான சின்னமாக இருந்துவருகிறது.

# புரட்சி தமிழர் அளிக்கும் வாக்குறுதிகள் அனைத்தும் வாக்குகளாக மாறும்..

# சிக்சர் அடிக்கும் எடப்பாடியார்..

- மயூரா அகிலன்

மக்களைக் காப்போம் தமிழகத்தை மீட்போம் தேர்தல் பிரசார சுற்றுப்பயணம் மேற்கொண்டு வரும் அஇஅதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் தொகுதி மக்களை சந்தித்து பேசும் போது அளிக்கும் வாக்குறுதிகள் பெருவாரியான மக்களைக் கவர்ந்து வருகிறது. இந்த வாக்குறுதிகள் அனைத்து வாக்குகளாக மாறுவது உறுதி என அதிமுக நிர்வாகிகளும் தொண்டர்களும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் தமிழக அரசியல் வரலாற்றில் தவிர்க்க முடியாத ஒரு அரசியல் கட்சியாக இன்றைக்கு இருக்கிறது. கடந்த 1972 அக்டோபர் மாதம் 17 ஆம் நாள் தொடங்கப்பட்ட அதிமுகவோட நிறுவனர் புரட்சித்தலைவர் எம்ஜிஆர் அவர்களுக்குப் பிறகு நிரந்தர பொதுச்செயலாளராக 30 ஆண்டுகளுக்கும் மேலாக எஃகு கோட்டையாக கட்டிக்காத்த புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தனக்குப் பிறகு 100 ஆண்டுகளைக் கடந்தும் அதிமுக நிலைத்து நிற்கும் என்று உறுதியளித்தார்.

கடந்த 2021ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற தேர்தலின் போது பொய்யான வாக்குறுதிகளை அளித்து போலி பிம்பங்களை கட்டமைத்து விடியா திமுக ஸ்டாலின் மாடல் அரசு ஆட்சிக்கட்டிலில் அமர்ந்துள்ளது. விளம்பர மாடல் விடியா திமுக அரசை, ஆட்சியில் இருந்து அகற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு அதிமுக பொதுச்செயலாளர் புரட்சித்தமிழர் எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் 'மக்களைக் காப்போம் தமிழகத்தை மீட்போம்' சுற்றுப்பயணத்தை கடந்த ஜூலை மாதம் கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் தொடங்கினார்.

மாவட்ட வாரியாக வணிகர்கள், தொழிலதிபர்கள், விவசாயிகள், நெசவாளர்கள், மீனவர்கள் என பலதரப்பட்ட மக்களை சந்தித்து குறைகளை கேட்பதோடு, அதிமுக ஆட்சிக்கு வந்த உடன் குறைகள் படிப்படியாக நிறைவேற்றப்படும் என உறுதி அளித்து வருகிறார். கிட்டத்தட்ட 153 தொகுதிகள் வரைக்கும் மக்களை சந்தித்துள்ள கழக பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிச்சாமி அவர்கள், ஒவ்வொரு தொகுதியிலும் அங்குள்ள குறைகளைப்பற்றி பட்டியலிட்டு பேசுவதோடு மக்கள் கூட்டம் முழுவதையும் தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார் என்றால் மிகையாகாது.



# விடியா திமுக அரசு மீது உள்ள குற்றச்சாட்டுகள்:

## தமிழ்நாட்டில் தினசரியும் அரங்கேறும் கொலைகளால் சட்ட ஒழுங்கு பிரச்சினை நீடிக்கிறது

இளம் சிறுமிகள் முதல் வயதான பெண்கள் வரை எங்கும் எப்போதும் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை

தமிழ்நாட்டில் போதைப்பொருள் நடமாட்டம் அதிகரிப்பால் சீரழியும் சிறார்கள்

அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில் குற்றவாளியை கைது செய்ய போராட்டம்

## யார் அந்த சார்?

யார் அந்த தியாகி என்ற கேள்வியுடன் ஹேஷ்டேக் பதிவிட்டு இணைய போராட்டம் நடத்தி விடியா திமுக அரசுக்கு கேள்வி எழுப்பினார்.



## மக்கள் மத்தியில் கழக பொதுச்செயலாளர் எடப்பாடி கே. பழனிச்சாமி அவர்கள் அளித்த வாக்குறுதிகள்:

» தமிழ்நாட்டின் அமைதி, வளம், வளர்ச்சி, மாநில உரிமை என அனைத்தையும் மீட்டுத் தருவேன்
» தாலிக்கு தங்கம் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படும்
» மணமக்களுக்கு பட்டு சேலை, பட்டு வேஷ்டி வழங்கப்படும்
» பொங்கல் பண்டிகைக்கு 2500 ரூபாய் தரப்படும்னு
» மாணவர்களுக்கான மடிக்கணினி திட்டத்தை மீண்டும் செயல்படுத்துவோம்
» வீடு இல்லாதவர்களுக்கு தரமான வீடுகள் கட்டித்தரப்படும்
» போதைப்பொருள்களுக்கு தமிழகத்தில் முற்றுப்புள்ளி வைக்கப்படும்
» ஏழை நெசவாளர்களுக்கு தரமான பசுமை வீடுகள் கட்டித்தரப்படும்
» நெசவாளர்கள் உற்பத்தி செய்யப்படும் துணிக்கு அன்றைய தினமே பணம் பட்டுவாடா செய்யப்படும்
» தமிழகத்தில் எஞ்சியுள்ள நீர்நிலைகள் அனைத்தும் தூர்வாரப்படும்
» அத்திக்கடவு அவிநாசி திட்டம்-2 தொடங்கப்படும்
» காவிரி குண்டாறு திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படும்.
» ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கண்மாய்கள் நிரப்படும்.
» முந்திரி கொட்டைகளை கையால் உடைப்பதற்கு பதிலாக சிறிய எந்திரம் மானிய விலையில் கொடுக்கப்படும்
» பலாப்பழங்களைப் பதப்படுத்தி வைக்க அதிமுக ஆட்சி அமைந்தவுடன் நடவடிக்கை எடுக்கக்கப்படும்
» தீபாவளி திருநாளில், தரமான சேலை வழங்கப்படும்.
» வேலைக்கு செல்லும் பெண்களுக்கு மானிய விலையில் ஸ்கூட்டி வழங்கும் திட்டம் மீண்டும் அமல்படுத்தப்படும்.
» தமிழ்நாடு முழுவதும் 4,000 அம்மா மினி கிளினிக்
» மீனவர்களுக்கு, மீன்பிடி தடைக்கால நிவாரணத்தொகை உயர்த்தி வழங்கப்படும்.
» விவசாய தொழிலாளர்களுக்கு கறவை மாடு, ஆடு, கோழி வழங்கும் திட்டம் என எடப்பாடியார் வழங்கி வரும் வாக்குறுதிகள் பல.














அது மட்டுமல்லாது எழுச்சி பயணத்தில் எடப்பாடியார் அளித்திருக்கும் வாக்குறுதிகளில் அதிரடியான வாக்குறுதி ஒன்று உள்ளது அது ஊழல் செய்யும் திமுக அமைச்சர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுதான். 2026 ஆட்சிமாற்றம் எப்போது வரும் என்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்தி வருகின்றன எடப்பாடியாரின் இந்தத் தேர்தல் வாக்குறுதிகள். புரட்சித்தமிழர் எடப்பாடியார் அளித்த வாக்குறுதிகளைக் கேட்டு ஒரு பெண் உணர்ச்சி வசப்பட்டு விசிலடித்து உற்சாகப்படுத்தினார்.

**இதை எல்லாம் பார்க்கும் போது தமிழ்நாட்டில் விரைவில் ஆட்சி மாற்றம் வரவேண்டும் என்ற எதிர்பார்ப்பை மக்கள் மனதில் ஏற்படுத்தியுள்ளது என்றால் மிகையில்லை.**

# திமுகவைப் பற்றி உங்களுக்கு எவ்வளவு தெரியும்?


## சுத்தி சுத்தி வந்தீக....குவிஸ்

திமுக என்கிற தில்லாலங்கடி கட்சியைப் பற்றி உங்களுக்கு எவ்வளவு தெரியும்?
ஓ நல்லாத் தெரியுமே என்கிறீங்களா? அப்படின்னா உங்களுக்காகத்தான் இந்த புதிர்ப்போட்டி.

1. கலைஞர் கருணாநிதி ரயிலே வராத தண்டவாளத்தில் தலைவச்சு படுத்து ஒருமுறை போராட்டம் செஞ்சார் ஞாபகம் இருக்கா? அந்த ஊர் எது தெரியுமா? குன்னக்குடி என்பவர்கள் 10க்குப் போங்க. கல்லக்குடி என்பவர்கள் 14க்குப் போங்க.
2. நெத்தியடி. வீராணம் திட்டம்தான் அந்த வீணாப் போன திட்டம். சரி. அப்படியே 6க்கு ஜம்ப் பண்ணுங்க.
3. ஒருமுறை ஊழல் வழக்கு தொடர்பா விசாரணை நடந்தது. அதிலே, 'சர்க்கரையை எறும்பு தின்னுருச்சு. சாக்குமூட்டையை கரையான் தின்னுருச்சு'ன்னு கருணாநிதி தரப்பு சொன்ன சமாளிப்பிகேஷன் ரொம்ப பிரபலம். கருணாநிதியோட அந்த ஊழல் வழக்கை விசாரிச்ச ஆணையத்தோட பேர் என்ன தெரியுமா? ஷா கமிஷன் என்பவர்கள் போங்க 7க்கு. சர்க்காரியா கமிஷன் என்பவங்க போங்க 13க்கு.
4. சென்னைக்கு குடிநீரை கொண்டுவரப்போறேன்னு கலைஞர் கருணாநிதி ஒரு பெரிய திட்டத்தைத் தீட்டினார். அதுக்காக ராட்சத குழாய்கள் எல்லாம் ரெடியாச்சு. கடைசியில் அந்த திட்டம் வீணான திட்டமா போச்சு. அந்த திட்டத்தோட பேர் என்ன? தெலுங்கு கங்கை திட்டம் என்கிறவங்க 9க்குப் போங்க. வீராணம் திட்டம் என்கிறவங்க 2க்கு வாங்க.
5. சொல்லி அடிச்ச கில்லி. நீங்க 12க்கு வரலாமே?
6. ஒரு ஈசியான கேள்வி. தேர்தல் கருத்துக்கணிப்பிலே தங்களை பின்னுக்குத் தள்ளிட்டாங்க என்கிற கோபத்திலே தினகரன் நாளிதழ் அலுவலகத்துக்கு திமுககாரங்க தீவச்சாங்க. 3 ஊழியர்கள் உயிரோட எரிக்கப்பட்டாங்க. அந்த ஊர் எது? ஞாபகம் இருக்கா? மதுரை என்கிறவங்க 5க்கு வாங்க. இல்லை திருச்சி என்கிறவங்க அப்படியே 11க்குப் போங்க.
7. இல்லீங்கோ. 6க்கு வாங்கோ...
8. கலக்கிட்டீங்க. ஒருவழியா இந்த புதிர்ப்பிரச்சினை ஓய்ஞ்சுது. 15க்கு போகலாம் வாங்க.
9. சொதப்பிட்டீங்க. அந்த வீணாப்போன திட்டத்துக்குப் பெயர் வீராணம் திட்டம். பிற்காலத்திலே புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வீராணம் திட்டம் மூலமா சென்னைக்கு குடிநீர் கொண்டு வந்தது சாதனை செஞ்சார். இப்ப வாங்க 12க்கு
10. இல்லை. குன்னக்குடி என்பது வயலின் வித்வான் வைத்தியநாதனின் ஊர். பரவாயில்லை விடுங்க. 3க்குப் போகலாம் வாங்க.
11. ம்ஹூம். மதுரையிலதாங்க அந்த அலுவலக எரிப்பு சம்பவம் நடந்தது. உங்க வசதிக்காக அதை திருச்சிக்கு மாத்த முடியுமா என்ன? அட பரவாயில்லை. விடுங்க. தாவுங்க 12க்கு.
12. காற்றில் கூட ஊழல் பண்ணுறவங்க என்கிற பேர் திமுகவுக்கு உண்டு. அப்படி ஒரு பெரிய ஊழல் குற்றச்சாட்டிலே திமுகவோட ஆ.ராசா, கனிமொழி இரண்டு பேரும் டெல்லி திகார் ஜெயிலுக்குப் போனாங்க. அந்த ஊழலோட பேர் என்ன? 3ஜி போர்பஸ் என்பவங்க 16க்குப் போய் பாருங்க. 2ஜி ஸ்பெக்ட்ரம் என்பவங்க 8க்குப் போய் பாருங்க.
13. அபாரம் போங்க. சர்க்கரை சாக்கு மூட்டை தொடர்பான விசாரணையிலே கருணாநிதி தொடர்பான விளக்கத்தைக் கேட்டு அப்படியே மூச்சடைச்சுப் போனது சர்க்காரியா கமிஷன்தான். இப்ப 4க்கு வாங்க.
14. அசத்திட்டீங்க. டால்மியாபுரம் என்கிற ஊரோட பெயரை கல்லக்குடின்னு மாத்தச் சொல்லி ரயில் வராத தண்டவாளத்தில் கருணாநிதி தலைவச்சு படுத்த இடம் கல்லக்குடிதான். 3க்குப் போகலாம் வாங்க.
15. வாங்க. எடுத்த எடுப்பிலேயே எல்லா கேள்விகளுக்கும் சரியான பதில் தந்திருந்தா நீங்க ஒரு அரசியல் நிபுணர் அல்லது நிபுணி. எல்லா பதிலுமே தப்பா? கவலைப்பட வேண்டாம். நீங்க திமுக பத்தி இன்னும் சரியா தெரிஞ்சுக்கல்லைன்னு அர்த்தம். நீங்க தெரிஞ்சுக்க வேண்டிய விஷயம் இன்னும் நிறைய இருக்கு. அவ்வளவுதான்.
16. அடப்பாவமே. கவுத்திட்டீங்க. போர்பஸ் ஊழல் என்கிறது வேற பெரிய இடத்து சமாச்சாரம். அதுக்கும் திமுகவுக்கும் சம்பந்தம் இல்லே. சரி. கடைசியா 15க்கு வாங்க.

# அரசியல் டூன்

## மனித உறுப்புகள் விற்பனை



# உதயநிதியின் நீட்டாகு நீட் ரகசியம்



# அண்ணா வழி திராவிடம்

